# தமிழிணையஅகராதி

## பயனர்கையேடு

திறமூலமாக உள்ள ஏழு முக்கிய தமிழ் அகராதிகள் தொகுப்பைக் கொண்ட மின்னகராதி ஆகும். இதில் பயனர்கள் தமிழ்ச்சொல்லை இட்டு அதற்கான விளக்கங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.




### அமைப்பு




அமைப்பு பகுதியில் தட்டச்சு அமைப்பையும், எழுத்தின் அளவையும் தேர்வு செய்ய வேண்டும். இயல்பில் ஒலிபெயர்ப்பு முறையில் இருக்கும். அதனால் நேரடியாக ஒலிப்பெயர்ப்பில் தமிழில் தடடச்சு செய்யலாம். தமிழ்99 தட்டச்சுமுறையைத் தேர்வு செய்தால் தமிழ்99 முறையில் தட்டச்சுசெய்யலாம்.




எழுத்தின் அளவை அதிகரிக்க பெருக்கு பொத்தானைச் சொடுக்கவேண்டும். குறைக்க சுருக்கு பொத்தானைச் சொடுக்க வேண்டும்.

சொந்த விசைப்பலகை கொண்டு தட்டச்சு செய்ய விரும்புவோர் தட்டச்சு என்ற வசதியை எடுத்துவிட்டுப் பயன்படுத்தலாம்.




தட்டச்சு செய்யும்போதே அதற்கான பரிந்துரைகள் காட்டப்படும். விரும்பினால் அவற்றைத் தேர்வுசெய்யலாம்.

சொல்லை உள்ளீடு செய்தபின்னர் தேடல் பொத்தானை அழுத்தித் தேடிக் கொள்ளலாம். அழிபொத்தான் மூலம் அழிக்கவும் செய்யலாம்.




ஏழு அகராதிகள் விளக்கங்களைக் காட்டும். மேலும் இதன் ஒரு சொல்லானது உருபுடன் இருந்தாலும் இக்கருவி புணர்ச்சி விதிகளின்படி பிரித்துச்சரியான விளக்கத்தை அளிக்கும்.

முதல்வரியில் பெயர்ச்சொல்லும் அதனோடு இணைந்துள்ள வேற்றுமை உருபையும் குறிப்பிடும்.




ஒவ்வொரு அகராதியின் தலைப்பு தடித்த எழுத்தில் காணப்படும். இணைய இணைப்பில் இருந்து அத்தலைப்பைச் சொடுக்கினால் மூலஅகராதியின் பக்கத்தைக்காட்டும்.

**இதில் இணைக்கப்பட்டுள்ள அகராதிகள்**

http://www.tamilvu.org/library/dicIndex.htm தமிழ் - தமிழ்அகரமுதலி

http://www.tamilvu.org/library/dicIndex.htm தமிழ்லெக்சிகன் - Tamil Lexicon

http://dsalsrv02.uchicago.edu/dictionaries/fabricius/ பாப்ரிசிஸ்அகராதி - J.P. Fabricius Dictionary

http://dsalsrv02.uchicago.edu/dictionaries/kadirvelu/ கதிர்வேலுஅகராதி -Na Kadirvelu Pillai Dictionary
http://dsalsrv02.uchicago.edu/dictionaries/mcalpin/ மெக்ஆல்பின்அகராதி - David W. McAlpin
http://dsalsrv02.uchicago.edu/dictionaries/winslow/ வின்சுலோMiron Winslow
http://dsalsrv02.uchicago.edu/dictionaries/tamil-lex/ சென்னைப்பல்கலைக்கழகம் (DSAL)

## நிறுவுதல்

கோப்பினை unzipசெய்து dictionary.exe என்ற கோப்பினைச் சொடுக்கி திறக்க வேண்டும். எங்கேயும் எளிதில் எடுத்துப் பயன்படுத்தலாம்.

## இணையத்தில்பயன்படுத்த

http://vaani.neechalkaran.com/dictionary.aspx

மேலும் உதவிக்கு neechalkaran@gmail.com